விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

கொழும்பு ஞாயிறு 2000, ஆனி 29 உ ஞாயிறு (13-7-69) ந. ஆண்டு 27 புத்தகம் 23 இதழ் 37




## பிரஜாவுரிமை வழங்குவதில் இலங்கையின் மந்த கதி:

# தமிழ்நாடு அரசு டெல்லிக்கு இடித்துரைக்கும்!

(நமது சென்னை நிருபர்)

இலங்கை இந்தியஒப்பந்தத்தின்கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதில் இலங்கை அரசு துரிதமாகவும் அந்தரங்க சுத்தியுடனும் செயற்படவில்லையென்றும், இது விஷயத்தில் இந்திய அரசு இலங்கை அரசைத் தூண்டக் கூடிய விதத்தில் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் இந்திய மத்திய அரசிடம் தமிழ் நாடு அரசு வற்புறுத்த இருக்கிறது.

இந்தியப் பிரஜைகளாக இதுவரை பதிவு செய்யப்பட்டவர்களின் தொகைக்கு அமைய ஒப்பந்த விதாசாரப்படி இலங்கைக் குடியுரிமையை இலங்கை அரசு வழங்குகிற வரையில் — மேலும் தொடர்ந்து இந்தியப் பிரஜாவுரிமை வழங்குவதை இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமென உத்தரவிடப்பட வேண்டுமென டெல்லியிடம் தமிழ் நாடு அரசு வற்புறுத்த இருக்கிறது.

இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் விதாசாரப்படி இலங்கைப் பிரஜாவுரிமையை இலங்கை அரசு வழங்கி முடிக்கும்வரை இந்திய அரசு இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களை திருப்பி அழைத்துக் கொள்ளக் கூடாதெனவும் தமிழ் நாடு அரசு டெல்லிக்கு இடித்துரைக்கும் என்று தெரிகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான 30-10-64 தொடக்கம் கடந்த மாதம் முடிய 44,512 பேர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதே நேரத்தில் ஆயிரம் பேருக்கும்குறைவானவர்களே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஏழுபேர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டால் நான்கு பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இலங்கை இந்திய ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. இதன்படி கடந்த மாத இறுதிவரை இலங்கை அரசு 25,436 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதில் இலங்கை அரசு தேவையற்ற காலதாமதமும் அசிரத்தையும் காட்டி வருகிறது. இலங்கை அரசின் இப்போக்கினை டெல்லிப் பாராளுமன்றத்திலும் [illegible] தடவைகளில் இடித்து

(9ம் பக்கம் பார்க்க)

### மொழிவழக்கு 17ம் திகதி விசாரணை

உத்தியோக மொழிச் சட்டத்துக்கு எதிராக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நடாத்தும் கோடீஸ்வரன் மொழி வழக்கு இம்மாதம் 17-ந் திகதி பிரிவி கவுன்சிலில் விசாரணைக்கு வருகிறது.

இவ்வழக்கில் கோடீஸ்வரன் சார்பில் பிரபல வழக்கறிஞர் சேர். டிங்கிள்புட் கியூ.சி. ஆஜராகிறார். சேர். டிங்கிள்புட்டுக்கு அனுசரணையாக இருக்கும் பொருட்டு இலங்கையின் பிரபல வழக்கறிஞர்களான திருவாளர்கள் சி. இரங்கநாதன் கியூ. சி., என். வி. குரோசட் தம்பையா ஆகியோர் இலண்டன் சென்றுள்ளனர்.

இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதில் பொதுவாக தமிழ் மக்களும் குறிப்பாக தமிழ் அரசாங்க ஊழியரும் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

### சமஷ்டி ஆட்சியின்கீழ் சம அந்தஸ்து!

கனடா நாட்டு நிர்வாகத்தில் பெரும்பான்மையினரின் மொழியான ஆங்கிலத்துக்கும் சிறுபான்மையினரின் மொழியான பிரெஞ்சுக்கும் உத்தியோக மொழி அந்தஸ்து வழங்கும் சட்டம் கனேடிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இனி இவ்விரு மொழிகளும் சம அந்தஸ்துள்ள மொழிகளாக கனடாவில் விளங்கும்.

கனடா சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டுள்ள நாடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் பிரிவுக்கு எதிராக ஓரவஞ்சனை

கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பிரிவின் எதிர்காலமென்ன? தமிழ்ப் பிரிவுக்கு எதிராக ஓரவஞ்சகம் காட்டப்படுவதேன்? இப்பிரிவை மெல்ல மெல்ல மூடிவிட தேசிய உயர் கல்விச் சபையும் கல்வியமைச்சும் முடிவு செய்துள்ளனவா? இதுபற்றி தமிழ் பா. உ. கள் யாரும் கவலைப்படவில்லையா? - இப்படிப்பட்ட கேள்விகள் இங்கு பயிலும் தமிழ் மாணவரிடையே எழுந்துள்ளது.

அண்மையில் இப்பல்கலைக் கழகத்தில் சமூகவியற்றுறை வரலாறு, பொருளாதாரப் பிரிவுகளுக்கு நடைபெறுள்ள நியமனங்கள் இந்த ஐயத்தை வலுப்படுத்தியிருக்கின்றன.

வரலாற்றுத்துறையில், சிங்களப் பிரிவுக்கு ஒரு பேராசிரியரும், 15 விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கும் அதே சமயத்தில் தமிழ்ப் பிரிவுக்கு பேராசிரியரிலிருந்து ஒருவிரிவுரையாளர் மட்டும் இடமாற்றம் செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ்ப்பிரிவுக்கு பேராசிரியர் யாரும் நியமனம் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரத்துறையிலும், சிங்களப்பிரிவுக்கு ஒரு பேராசிரியரும் பத்து விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கையில் தமிழ்ப் பிரிவுக்கு ஒரே ஒரு தமிழ் விரிவுரையாளர் மட்டுமே நியமிக்கப்பட்டிருக்கிறார். இங்கும் தமிழ் பிரிவுக்கு பேராசிரியர் யாரும் நியமிக்கப்படவில்லை.

இது தமிழ் பிரிவுக்கு எதிராக வேண்டுமென்றே காட்டும் பாரபட்ச ஓரவஞ்சனையன்றி வேறென்ன? என்று குமுறலுடன் கேட்கிறார்கள் தமிழ் மக்கள்.

இதுபற்றி தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியதாவது:-

''தேசிய உயர் கல்விச் சபையின் 1968—1969 வரவு செலவுத் திட்டப்படி வரலாற்றுத் துறைக்கு ஒரு பேராசிரியர் பதவியும் 18 விரிவுரையாளர் பதவிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டவை போக எஞ்சியுள்ள இரு காலி இடங்களாவது தமிழ்ப் பிரிவுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(9ம் பக்கம் பார்க்க)

## அரியணை உரையை தமிழரசு எதிர்க்கும்!

அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும் என பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அரியணை உரைக்குத் தமிழரசுக் கட்சி பல திருத்தப் பிரேரணைகளை கொண்டு வரவிருக்கிறதென்றும் இவ்வாரஇறுதியில் இப்பிரேரணைகளை கட்சி தயாரிக்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

கூட்டுக் கட்சிகள் கொண்டு வரவிருக்கும் பிரேரணைகள் தமிழரசுக் கட்சிக்கு உடன்பாடானதாக-பொதுப் பிரச்சினையை ஒட்டியதாக இருந்தால், எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து அவற்றை ஆதரித்து வாக்களிக்கவும் நாம் தயங்க மாட்டோமெனவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.



## தமிழர்களுக்கு சிறிமாவோ வழங்க விருக்கும் உரிமைகள்!

கூட்டுக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் தமிழ்ப் படங்கள் இறக்குமதியை முற்றாகத் தடுப்போம்; தமிழ்ப் பத்திரிகைகள், புத்தகங்களும் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாவதைத் தடைசெய்வோம்;

—இப்படி பலாங்கொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகா அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றிக் கூறியிருப்பதாவது:—

'தமிழ் நாட்டிலிருந்து தேவைக்கு அதிகமாகப் பத்

(9ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கனடா கற்பிக்கும் பாடம்!

ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளித்து இரு மொழிகளையும் கனேடிய நாட்டின் உத்தியோக மொழிகளாக ஏற்றுக் கொள்ளும் சட்டமொன்று இவ்வாரம் கனேடிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் கனடாவில் பெரும்பான்மையோர் பேசும் மொழி; பிரெஞ்சு சிறுபான்மையினர் பேசும் மொழி. அப்படியிருந்தும் இரு மொழிகளும் சம அந்தஸ்துடன் அந்நாட்டின் உத்தியோக மொழிகளாக்கப்பட்டு இருக்கின்றன. கனடா காட்டிய இந்த முன்மாதிரியிலிருந்து இந்நாட்டுப் பெரும்பான்மை மக்களும், சிறுபான்மை மக்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன.

கனடா இலங்கையைப் போன்று இரு மொழிகளைப் பேசும் இன மக்களைக் கொண்ட ஒரு நாடாக இருந்த போதிலும், இந்நாட்டில் திணிக்கப்பட்டிருப்பது போன்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை அங்கு கிடையாது. ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழும் பல்வேறு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ள சமஷ்டி அரசியல் திட்டத்தையே கனடாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் சிறுபான்மை மக்களாகிய பிரெஞ்சு பேசும் மக்களின் மொழி, பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணத்தில் மட்டும் ஆட்சி மொழியாக இதுவரை இருந்து வந்தது. கனேடிய மத்திய ஆட்சியில் ஆங்கிலம் இதுவரை ஆட்சி மொழி ஸ்தானத்தைக் கைப்பற்றியிருந்தது.

ஆங்கிலம் மட்டும் என்ற கொள்கையை எதிர்த்து நாடு முழுவதும் ஆங்கிலத்துடன் பிரெஞ்சு மொழியும் உத்தியோக மொழியாக்கப் படவேண்டுமென பிரெஞ்சுக் கனேடியர்கள் கிளர்ச்சியிலிறங்கினர். இந்தக்கிளர்ச்சி, பிரெஞ்சுக் கனேடியர்களின் உள்ளத்தில் பிரிவினை எண்ணத்தையும் உறுதியாக வளர்த்து வரத் தொடங்கியது.

பிரெஞ்சு பேசும் சிறுபான்மை மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து அங்கீகரிக்க மறுப்பது கனடாவின் தேசிய நலன்களுக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பயங்கரமான ஆபத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதை ஆங்கிலம் பேசும் கனேடியர்களும், கனடா அரசாங்கமும் புரிந்து கொண்டு எடுத்த புத்திசாலித்தனமான நடவடிக்கையினால்தான் கனடாவில் இன்று இரு மொழிகளுக்கும் சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சிறுபான்மை மக்களின் உணர்ச்சி பூர்வமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு சகிப்புத்தன்மையுடன் அவர்களைத் திருப்திப்படுத்தி அணைத்து நடத்துவதே பெரும்பான்மை இன மக்களின் கடமை என்பதை கனடா உணர்த்தியிருக்கிறது. இந்தப் பாடத்தை இனவெறி பிடித்து அலையும் நமது சிங்களசகோதரர்கள் உணர வேண்டும்.

சிறுபான்மை மக்களிடையே அதிருப்தியும் வெறுப்பும் வளர விடுவது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் எந்த நேரமும் வெடிப்பு ஏற்படுத்தக் கூடியது. தேசிய நலன்களில் உண்மையான ஆர்வம் அக்கறை இருக்குமானால் பெரும்பான்மை இன மக்கள் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொண்டு சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது கனடாவிடமிருந்து சிங்களத் தலைவர்களும், சிங்கள மக்களும் கற்க வேண்டிய மற்றொரு பெரிய பாடமாகும்.

கனடா காட்டிய முன்மாதிரியிலிருந்து தமிழ் பேசும் மக்கள் கற்றுக் கொள்ளக் கூடிய பாடம் ஏராளம். முதலாவதாக, கனடா சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நாடு என்ற உண்மையை நாம் ஒரு போதும் மறந்து விடலாகாது.

கனடாவில் சமஷ்டி ஆட்சிமுறை அமுலிலிருந்து வருவதனால் தான் அங்கு சிறுபான்மை மக்கள் தமது மொழிக்குப் பெரும்பான்மை மக்களின் மொழியுடன் சம அந்தஸ்தை இன்று நிலைநாட்ட முடிந்திருக்கிறது. ஒற்றையாட்சி அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் இரு மொழிகள் உத்தியோக மொழிகளாக இயங்குவது அசாத்தியமானது.

எந்தெந்த நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உத்தியோக மொழிகளாக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த நாடுகளிலெல்லாம், சமஷ்டி ஆட்சியோ அல்லது சமஷ்டி அமைப்புப் போன்ற (பிரதேச சுயாட்சி) வேறு அமைப்புக்களோ தாம் இயங்கி வருகின்றன. ஒற்றையாட்சியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உத்தியோக மொழிகளாக விளங்கும் நாடுகள் எதுவுமில்லை.

திரு. பொன்னம்பலம் கூறுவதுபோல—ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்தை இந்நாட்டில் ஒரு போதுமே நிலைநாட்டிவிட முடியாது. நிலைநாட்டினாலும் நடைமுறையில் தனிச் சிங்கள மொழியே ஆதிக்கம் செலுத்தும்.

அதிகம் வேண்டாம். 1966-ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட விதிகள் சட்டப்படி வடக்கிலும் கிழக்கிலும் சிங்களத்துடன் தமிழும் ஆட்சி மொழியாக விளங்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அச்சட்டம் பயன்படுத்தப்படுகிறதா? [illegible] மட்டும் அன்றோ இனிக்கப்படுகிறது? இது ஏன்? இதுதான் ஒற்றையாட்சியில் விளைந்துள்ள பேராபத்து.

ஒற்றையாட்சியின் கீழ் சகல அதிகாரமும் சிங்கள மத்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளதால், தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்தாது தட்டிக் கழிக்கிறது ஆட்சிபீடம். வடக்குகிழக்கில் தமிழைஆட்சிமொழியாக்குவதற்கு தானே நிறைவேற்றியுள்ள சட்டத்தையே அமுல் நடத்தாது தட்டிக் கழிக்கும் ஒற்றையாட்சிச் சிங்கள அரசுதானா தமிழுக்கு சம அந்தஸ்தை எப்போதாவது வழங்கப் போகிறது? வழங்கினாலும் அமுல் நடத்தப் போகிறது?

அதிகாரத்தை பரவலாக்கும் மாவட்ட சபைகள் மசோதா நிறைவேற்றப்பட்டு சபை நிறுவப்பட்டிருந்தால், தமிழ் மொழிப் பிரமாணங்களை வடக்கு கிழக்கில் அமுல் நடத்தும் பொறுப்பு அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்; இரு மாகாணங்களிலும் நடைமுறையில் இன்று தமிழ் ஆட்சி மொழியாகவுமிருக்கும்.

ஆகவே ஒற்றையாட்சியின் கீழ் சம அந்தஸ்து என்பது மாயமான்; வெறும் கானல் நீர்; இக் கோஷத்தால் தமிழினத்துக்கு எதுவித நன்மையும் ஏற்பட முடியாது என்பதை அழுத்தமாக கூறவிரும்புகிறோம்.

இந்நாட்டில் தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, தமிழ் இனத்துக்கும், தமிழ்ப் பிரதேசத்துக்கும் பாதுகாப்பு அளிக்க வல்லது சமஷ்டி அரசியலமைப்பே. சமஷ்டி அரசி[illegible] மொழிக்கு சிங்கள மொழி[illegible] நாட்ட முடியும். கனடா உணர்த்தும் இப்பாடத்தை தமிழ் பேசும் மக்கள் உய்த்து உணர்ந்து கொள்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செத்துப்போன மன்றத்தின் செயலாளர் விடும் சில்லறைச் சேட்டை!

## இலக்கிய உலகு

"வேதாளம்"

செத்துப்போன எழுத்தாளர் மன்றங்களின் பெயரால் அறிக்கைவிடும் 'சேஸ்' ஒன்றுகொழும்பில் தோன்றியிருக்கிறது. அதுவும் அம் மன்றத்தின் தலைவராக இருந்தவரை பழிவாங்கும் கேவலமான அரசியல் நோக்குடன் மன்றத்தின் எஞ்சியுள்ள கடிதத் தலைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுவருகின்றனவாம்.

பச்சையாகக் கூறிவிடுகிறேன். கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் தோன்றிசில காலம் மட்டும் உயிர் வாழ்ந்து இறந்து போன ஒரு அமைப்பு. இம் மன்றம் தோன்றுவதற்கு மூல காரணமாக இருந்த இளைஞர் இப்போது வழக்கறிஞராக கடமையாற்றுகிறார். இம்மன்றம் வெளியிட்ட 'பதுத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்ற நூலும் இவ்விளம் வழக்கறிஞரின் தனிப்பட்ட முயற்சியாலேயே வெளியிடப்பட்டது.

இம்மன்றத்தின் உத்தியோகத்தர்கள் தேர்வு 1963ம் ஆண்டு நடைபெற்றது. அதன்பின் இன்றுவரை நடைபெற்றதில்லை. இம்மன்றத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் இப்படி பொதுமன்றம் அமைத்ததையே மறந்துவிட்டிருப்பார்கள். காரணம் மன்றம் தொடர்ந்து இயங்கவில்லை; இயங்காதபோது இறந்துவிட்டது என்பது தானே அர்த்தம்?

25.3.63ல் வெளிவந்த வீரகேசரி செய்திப்படி இம்மன்றத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

தலைவர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம், துணைத் தலைவர்: வித்துவான் இ. சி. சோதிநாதன், செயலாளர்: திரு. இ. சங்கரப்பிள்ளை, துணைச்செயலாளர் திரு. கோவை மகேசன், பொருளாளர் திரு. ச. கணேசலிங்கம் ஆட்சிமன்ற உறுப்பினர்கள்: மகாகவி, வே. தங்கவேலு, வை. முத்துக்குமாரசாமி, ச. வி. பிள்ளை, பொ. இராசகோபால், செ. சந்திரகாசன், சமுவேந்தன், செ. இரத்தினலிங்கம், செல்வி சொருபவதிநாதன், கா. சு. அ. கபூர்.

இயங்காது நின்றுபோன மன்றத்தின் நிர்வாகக்குழு இதுதான். இந்தக் குழுவினைக் கூட்டாமல், தாம் நினைத்தபடிக்கு தம்மிடம் சிக்கிக்கொண்ட கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தி பண்டிதர் இரத்தினம் அவர்களுக்கு களங்கம் கற்பிப்பதில் இறந்துபோன இச்சங்கத்தின் செயலாளர் ஈடுபட்டுள்ளார்.

மன்றத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த பிரமுகர் அன்று தமிழரசுக் கட்சியிலிருந்தவர்; பின்னர் பல்டியடித்து 'விடுதலைக்கு' மாறி அங்கிருந்தும் விரட்டப்பட்டு இன்று 'தமிழுலகம்' ஏட்டின் புகுந்து தமிழ்க் கவிஞர்களையும் தமிழ் அறிஞர்களையும் வாய்க்கு வந்தபடி திட்டி வருபவர் என்று கருதப்படுவர். எனவே தான் இன்று அரசியலில் பண்டிதரின் எதிரியாக மாறியுள்ள இந்த குறுக்குட்டி, தனது சுயத்தனமான வேலையில் இறங்கி, தமிழ் எழுத்துலகுக்கே களங்கம் தேடுகிறது.

அண்மையில் இம்மன்றச் செயற்குழுக்கூட்டத்தில் திரு. இரத்தினம் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகவும் பின்னர் திரு. இரத்தினத்தை நேரில் அழைத்து விளக்கம் கோரப் போவதாகவும் இந்தக் குறுக்குட்டி ஒரு அறிக்கை வெளியிட்டது. இச்செய்தியை ஆராய்ந்து பார்க்காமலேயே ஒரு தினசரியும் பிரசுரித்திருந்தது.

ஆனால் நாம் மேலே கூறப்பட்ட (செயலாளர் என்ற பெயர்கொண்ட பிரகிருதியைத் தவிர) மன்றத்தின் உத்தியோகத்தர் பலருடனும் தொடர்பு கொண்ட போது, 'கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றக் கூட்டமா? அதுதான் எப்போதோ செத்துவிட்டதே; மன்றக் கூட்டம் எதற்கும் நாம் அழைக்கப்படவில்லையே; என்று ஆச்சரியத்துடன் தெரிவித்தனர்.

(9 ம் பக்கம் பார்க்க)

# மாவீரன் நெப்போலியனின் வரலாற்று ஓவியம்

[illegible]

# இரத்தம் பொங்கிய 20 ஆண்டுகள்!

[illegible]

## அறிஞர் அண்ணா

[illegible]

(தொடரும்)


## மாயாஜாலம்

[illegible]

நீலன் கந்தசாமி மந்திரவாதி
நிட்டம்புவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வாவுக்கு மந்திரி பதவி பெறவே டி. எஸ். சேனநாயகா காலில் மண்டியிட்டாராம்!

அரசியலில் முழுப் பொய்யும் புரட்டும் கூறுவதில் சமர்த்தரான தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், அண்மைக்காலமாக பெரியதொரு பொய்யை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் நியாகத்தின்மீது களங்கம் கற்பிக்கும் நோக்குடன் ஆங்காங்கே கூறிவருகிறர்.

1949ம் ஆண்டு தமிழ் காங்கிரசிலிருந்து திரு. செல்வநாயகம், காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியை நிறுவியதற்கு காரணம், திரு. செல்வநாயகத்திற்கு மந்திரிப் பதவி கிடைக்காததனுல்தான் என்பதாக அபாண்டம் நிறைந்த பெரிய புழுகு ஒன்றை திரு. பொன்னம்பலம் ஆங்காங்கே கூறிவருகிறர்.

## பொன்னம்பலத்தின் வெட்கங்கெட்ட கூற்று!

அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் திரு. பொன்னம்பலம் இந்த கருத்தை வெளியிட்டாராம். தாம் பெரிய சேனநாயகாவின் காலில் விழுந்தது தமக்காக அல்லவென்றும் திரு. செல்வநாயகத்துக்கு மந்திரிப் பதவி கொடுக்கும்படியே தாம் டி. எஸ். காலில் விழுந்ததாகவும் கூறினராம்.

திரு. பொன்னம்பலம் இப்படிக் கூறியது உண்மையாக இருந்தால், இதைவிட வெட்கங்கெட்ட கூற்று வேறு எதுவும் இருக்கமுடியாது. திரு. பொன்னம்பலம் பெரிய சேனநாயகாவின் காலில் விழுந்து கெஞ்சியும் செல்வாவிற்கு மந்திரிப் பதவி கொடுக்க அவர் மறுத்தது உண்மையானல் திரு. பொன்னம்பலத்துக்கு அரசியலில் சூடுசுரணை மானம் ஈனம் கொஞ்சமாவது இருந்தால், காலில் விழுந்து கேட்டதைக்கூட செய்ய மறுத்த டி. எஸ். உடன் மேலும் என்ன நட்பும் உறவும் அன்று வேண்டிக் கிடக்கிறது?

திரு. பொன்னம்பலம் இப்படியான ஒரு பொய்யை அடிக்கடி கூறி தமிழரசுத் தந்தை மீது களங்கம் ஏற்படுத்த முனைகிறர். ஆனல் தியாகத்திருவுருவான தந்தை செல்வநாயகம் எப்படிப்பட்டவர் என்பதையும், திரு பொன்னம்பலம் எப்படிப்பட்டவரென்பதையும் தமிழ் மக்கள் வெகு தெளிவாக உணர்ந்துவைத்திருக்கிறர்கள்.

## தனிப்பெருந் தலைவர் மந்திரியான அந்தரங்கம்!!

1947-ம் ஆண்டு தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்தவர் பொன்னம்பலம். அவருடைய சிபாரிசை திரு. சேனநாயக்கா ஏற்கவில்லை என்பதை உண்மை என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானும் அதன் பொருள் என்ன? தேவலம் பொன்னம்பலத்தின் பேச்சுக்கு, அவருடைய சிபாரிசுக்கு திரு. சேனநாயகாவிடம் கூட மதிப்பு இருந்திருக்கவில்லை என்பதுதானே? இந்த நிலையில் மானமுள்ள எவருக்கும், 'அவருக்குக் கொடுக்காவிட்டால் பரவாயில்லை, ஐயனே அடியேனுக்குத் தருகுகவே மந்திரிப் பதவியை' என்று கை நீட்டுவாரு?

'அப்படித்தான் நாம் கை வேந்தும் பெற்றேன்' என்று மானம், ரோசம், வெட்கம் எதுவும் இல்லாமல் கூறுகிறரே இந்தத் தனிப்பெருந் தலைவர், தமிழினத்தின் மானத்தையே போக்கி விட்ட இந்த ஆயனிடம் தம் பிரானே அரசியலிலேதோனும் நிக்க வேண்டாமா தமிழ் பேசும் மக்கள்!

### திரு. டி. எஸ். போட்ட நட்டம்

உண்மையில் நடந்தது என்னவென்றுல் திரு. டி. எஸ். சேனநாயகா திரு. பொன்னம்பலத்துக்கு மந்திரிப் பதவி கொடுக்க ஆரம்பத்தில் ஒருபோதும் விரும்பவில்லை. முதலில் அவர் போட்ட திட்டம் தமிழ் காங்கிரஸிலே எப்படியாவது ஒரு பிளவை ஏற்படுத்தி விடவேண்டும் என்பது தான்.

அதோடு திரு. பொன்னம்பலத்தை தமிழ் பேசும் மக்களின் ஒரு செல்லாக் காசாக ஆக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினர்.

அதற்கு அவர் கையாள விரும்பிய வழி என்ன தெரியுமா? திரு. பொன்னம்பலத்தை ஒருபுறம் ஒதுக்கி விட்டு அவருக்குப் பின்னே புள்ளவரையாவது பிடித்து மந்திரியாக்கிவிட முடியுமா என்று அவர் பார்த்தார். திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தை ஒரு மந்திரியாகவும், இன்னெருவரை உதவி மந்திரியாகவும் ஆக்கிவிட்டால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தி விடலாம் என்று அவர் கருதினர்.

இன்னுமொன்றும் ஆகிவிடும்

'அதாவது திரு. செல்வநாயகம் மந்திரிப் பதவி ஏற்க ஒப்புக் கொண்டால் தமிழ் காங்கிரஸ் பிளவுபட்டு பொனு பின்னையாகி விடும் என்பது ஒன்று. அதே சமயத்தில் திரு. செல்வநாயகத்தின் செல்வாக்கு உயர்ந்து திரு. பொன்னம்பலம் தமது தமிழர் தலைமைப் பதவியை இழந்து பினைவிக்கத் தள்ளப்பட்டு விடுவார் என்பது மற்றென்று.

இந்த சூழ்ச்சியை மனதில் வைத்துக் கொண்டு பல பிரமுகர்களை திரு. செல்வநாயகத்திடம் இரகசியத் தூது அனுப்பினர் திரு. டி. எஸ். சேனநாயகா.

### மந்திரிப் பதவி ஏற்க முடியாது

திரு. செல்வநாயகம் இன்று போலவே அன்றும் நீதி தவறுதவராக, நெறி தவறுதவராக, உறுதி தளராதவராக நிமிர்ந்து நின்றர். 'முடியாது. ஒரு போதும் நானே, தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த வேறு யாருமோ மந்திரிப் பதவி ஏற்க முடியாது. தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியிலிருந்து இம்மியும் வழுவ முடியாது' என்று தூது வந்த எல்லாப் பிரமுகர்களிடமும் கண்டிப்பாகச் சொல்லி விட்டார் திரு. செல்வநாயகம். இந்த விவரம் எல்லாம் திரு. பொன்னம்பலம் நன்கு அறிவார்.

திரு. செல்வநாயகம் மந்திரிப் பதவியை ஒரு போதும் ஏற்க மாட்டார் என்பதை அறிந்ததும் திரு. டி. எஸ். சேனநாயகா மற்றெரு கணையைத் தொடுத்தார். இந்தக் கணைமூலம் திரு. பொன்னம்பலத்தை முற்றாக அழிக்க முடியாவிட்டாலும், தமிழ் காங்கிரஸின் பலத்தை முறியடித்து விடலாம் என்று நம்பினர். மேலும் பிரமுகர்களைத் தூது அனுப்பினர். அப்படிச் சென்ற பெரியார்கள் திரு. செல்வநாயகத்திடம் என்ன சொன்னார்கள் தெரியுமா?

### ஆசை வார்த்தை

'திரு. செல்வநாயகம் அவர்களே, தாங்கள் ஒரு மதிப்பு வாய்ந்த கண்ணியவான். தமிழ் மக்கள் எல்லா மக்கள் ஆகிய எல்லோருடைய மதிப்பையும் நல்ல ... சட்டத்துறையில் மிக உன்னதமான ஒருஸ்தானத்தைப் பெற்றிருக்கிறீர்கள். ஒரு நீதி வெளிச்சமாக (அந்த நேரத்தில்) இருக்கிறீர்கள். தாங்கள் எதற்காகப் பல வந்த அரசியல் துறையில் ஈடுபட்டு நேரத்தையும், சக்தியையும், பொருளையும், மதிப்பையும் இழக்க வேண்டும்? அதுவும், பொன்னம்பலம் போன்ற ஒரு நாணயமற்ற அரசியல் குருட்டுக்காரனுக்குப் பின்னல் ஓட்டிக் கொண்டு திரிகிறீர்களே! தங்கள் அருமையும் பெருமையும் அவருக்குத் தெரியுமா? பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா நல்ல மனிதர், தங்களிடம் மிக மதிப்பு வைத்திருக்கிறர். தாங்கள் விரும்பினுல் தங்களை ஒரு சுப்பிரீம்கோர்ட் நீதியரசராக நியமிக்க விருப்பமுடையவரா யிருக்கிறர். அரசியலை விட்டொழியுங்கள். அந்த உன்னத பதவியான உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள், தங்களுக்கு மக்காப் புகழும், மதிப்பும், கௌரவமும் ஏற்படும். தமிழ் இனமே தங்கள் பதவியால் பெருமையுறும். இலங்கையும் சட்டத்துறையும் தங்கள் தகுதிமிக தலைசிறந்த சட்டத் நிரப்புனரால் உயர்ச்சியுறும் என்றெல்லாம் சொன்னார்கள்.

### தகுந்த அத்தாட்சி

இவ்வாறு திரு. செல்வநாயகத்திடம் தூதுசென்ற பிரமுகர்களும் சமீபத்தில் மறைந்த பிரபல வழக்கறிஞரும், காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவின் அந்தரங்க சட்ட ஆலோசகராயிருந்தவருமான திரு. எச். வி. பெரேராவும் ஒருவர் என்று நாம்இங்கு பெயர் குறித்து அத்தாட்சிப்படுத்தக் கூடியவர்களாயிருக்கிறேம். இந்த விபரங்களும் திரு. பொன்னம்பலத்துக்குத் தெரிந்தவையே.

### சா. ஜே. வே. பதில்

மேற்கண்டவாறு தூது வந்த பெரிய நண்பர்களிடமும், அபிமானிகளிடமும், பிரமுகர்களிடமும் திரு. செல்வநாயகம் பின் வருமாறு கூறினர்.

"உங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் நன்றி.

திரு. பொன்னம்பலத்தை நாங்கள் தலைவராக ஏற்று அப் பொது மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்துப் பாராளுமன்றத்துக்கு வந்திருக்கிறேம். இந்த நிலையில் நான் எங்கள் கட்சித் தலைவரைக் கைவிட்டு வரவோ அல்லது மந்திரியாகவோ தயாராயில்லை. நம்பிய பொதுமக்களுக்குத் துரோகம் செய்யவும் முடியாது. என்னுடைய சட்ட ஞானத்தைப் போற்றுகிறீர்கள். அந்த சட்ட ஞானந்தான் ஒரு விஷயத்தை எனக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது, சோல்பரியின் ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் பேசும் இனத்தின் எதிர்காலம் பாழாகப் போகி-



றது என்பதுதான் எனது சட்ட ஞானம் காட்டும் தரிசனம். என்னுடைய இன மக்கள் அழிவதை, அழிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு நான் உயர் நீதி மன்றத்தின் உயர் நீதிபதியாசனத்தைக் கட்டிக் கொண்டிருந்தால் போதுமா? அரசாங்க பதவி ஒன்றிலிருந்தால் நான் ஆட்சியாளருக்கு விரோதமாகச் செயல்பட முடியுமோ? அழிக்கப்படும் தமிழினத்துக்கு, அழிக்கப்படும் தமிழகத்துக்கு, நசுக்கப்படும் தமிழ் மொழிக்கு பாதுகாப்புத் தேட முடியுமா? நான் தமிழ் பேசும் மக்கள் நலனுக்காக என்னுடைய எதிர்காலம் முழுவதையும் அர்ப்பணித்து ஒரு அரசியல் வாதியாகி விட்டேன். மீண்டும் ஒரு அரசியல் வாதி

(8ம் பக்கம் பார்க்க)


## அச்சகத்தோரே! அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றேம.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 23411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# இருவித உணர்வுகள்

## எஸ். குணம்

அன்று 'போயா' விடுமுறை நாள். வீட்டுக்கு குழந்தை குட்டிகளைப் பார்க்க வந்தவர்கள் மீண்டும் தமது தொழிலுக்குச் செல்ல மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு வந்திருந்தார்கள். புகையிரத நிலையம் திருவிழா நடக்கும் கோயிலைப் போன்று காட்சி கொடுத்தது.

சுந்தர் வீட்டுக்கு வந்திருந்த தன் மகள் சுலோசனாவைப் பாடசாலை விடுதியில் விட்ட பின்னர் கைக் கடிகாரத்தை நோக்கினான். புகையிரதம் வெளிக்கிட இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. மகளிடம், 'போய் வருகிறேன்' என்று சொல்லிக் கொள்ளவும் நேரம் இல்லாமல் ஓட்டமும் நடையுமாகக் கோட்டை முனைப் பாலத்தடிக்கு வந்தான். பெயரளவில் 'டாக்ஸி' என்று சொல்லிக் கொள்ளும் கார் ஒன்றைப் பிடித்துக் கொண்டு புகைவண்டி நிலையத்திற்கு விரைந்தான். டாக்ஸிக்காரனுக்கு இரண்டு ரூபாவை எடுத்து வீசி வைத்துவிட்டு மூன்றாம் வகுப்புக்கு ஒரு பிரயாணச்சீட்டு வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். அவனுக்கு நல்லகாலம் போலும்! அன்று புகைவண்டி பத்து நிமிடம் தாமதித்தது.

புகைவண்டியின் கடைசியில் திருகோணமலைப் பெட்டி இருளில் அமிழ்ந்திக் கிடந்தது. உள்ளே மின் மினிப் பூச்சியின் ஒளியைப் போன்று விளக்குகள் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. திருகோணமலைப் பெட்டி கடைசியாக இருந்த படியாற் போலும் எல்லாவித சௌகரியங்களிலும் கடைசியாகவே இருந்தது. மாரிகாலத்தில் மந்தைகள் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து கொண்டிருப்பது போல திருகோணமலைப் பெட்டிக்குள்ளும் மக்கள் எல்லோரும் மாக்களாகவே காட்சி கொடுத்தனர்.

'நாங்கள் கொடுப்பது காசு இல்லைப் போலும்! ஏனைய புகைவண்டிப் பிரயாணிகளுக்கு இருக்கும் சௌகரியம் நமக்கு இல்லையே' என்று ஒருவர் முணு முணுப்பார்.

'நம் காரில் அச்சில்லை' என்பார் இன்னொருவர். இவ்வாறு கால் நீட்டவும் இடமில்லாதபடி மூடைகள் அடுக்கப்பட்டிருப்பது போல நெருங்கிக் கொண்டிருந்த கூட்டத்துள் சுந்தரும் ஒருவனாகிக் கொண்டான்.

சுந்தருக்கு திருகோணமலைப் பிரயாணம் தண்ணீர்ப் பட்டபாடு. அவன் ஒவ்வொரு கிழமையும் தான் ஊருக்கு வந்து போகிறவனாயிற்றே. முன் பிறவியில் தான் செய்த பாவந்தான் இதற்கு மூலகாரணம் என்று ஏற்கனவே தீர்மானித்த சுந்தர் இப்போதெல்லாம் பிரயாணக் கஷ்டத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. அவனது சிந்தனையெல்லாம் இடமாற்றம் ஒன்றிலேதான் தேங்கி நின்றது.

சுந்தர் உப்பாறு என்னும் அழகான ஒரு சிறு கிராமத்திலே உணவு உற்பத்தி உத்தியோகத்தராகக் கடமை பார்ப்பவன். உப்பாறு தெங்குத் தீவுக் கிராமமாக இருந்தாலும் அங்கு வதியும் கிராமவாசிகள் கடற்றொழிலில் ஈடுபடாமல் தோட்டப் பயிர்ச் செய்கையிலும் வேளாண்மைச் செய்கையிலும் ஈடுபட்டிருந்தார்கள். அரசாங்கம் அம்மக்களின் ஊக்கத்தையும் விடாமுயற்சியையும் கண்டு அவர்களுக்கு உணவு உற்பத்திக்கான பல உதவிகளையும் செய்து கொடுத்துள்ளது. ஆனால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியுள்ளவர்களாகவிருந்தாலும் ஒரு குறையும் இருந்தது. அது போக்குவரத்து வசதிக் குறைவு. மட்டக்களப்பு திருகோணமலை கரையோரப் பாதை இருந்த பொழுது பஸ் சேவை இருந்தது. ஆனால் அப்பாதையில் இப்போ பஸ் வண்டிகள் செல்வது இல்லை. திருகோணமலைக்குச் செல்ல வேண்டுமானால் நடந்து இடையே, நந்தனுக்கு முன் வழி மறைத்த நந்தி போலக் கிடக்கும் உப்பாற்றுத் துறையையும் கிண்ணியாத் துறையையும் கடந்த பின்னரே பஸ் கிடைக்கும்.

புகைவண்டிப் பாதுகாவலர் பச்சை விளக்கைக் காட்டியதும் வண்டி நகரத் தொடங்கிற்று. குற்றுயிராகக் கிடந்த விளக்குகள் நாங்கள் மடிந்துவிடவில்லை உயிரோடுதான் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தன. வண்டி ஆங்காங்கே உள்ள புகைவண்டி நிலையங்களில் நின்று நின்று மேலும் பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

சுந்தருக்கு நித்திரை வரும் போல் இருக்கவே கையிலிருந்த அன்றைய தினசரிப் பத்திரிகையை நடைபாதையில் ஒரு ஓரமாக விரித்து விட்டு அதில் 'சிவ சிவா' என்று சொல்லிக் கொண்டு கண்ணயர்ந்தான்.

புகைவண்டி பொலனறுவையில் நின்றுகொண்டிருந்தது; சுந்தருக்கு தூக்கம் கலைந்துவிட்டது. பெட்டிக்குள் ஒரு சிலர் சிரிசிரியெனச் சிரித்து சக பிரயாணிகளுக்கு பெரிதும் உபத்திரவத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். படுத்த படுக்கையிலே கிடந்துகொண்டு இவர்கள் ஏன் இப்படிச் சிரிக்கிறார்கள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டான் சுந்தர்.

அவன் படுத்துக்கொண்டிருந்த இடத்துக்கு அருகில் உள்ள ஆசனத்தில் பத்தொன்பது வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருத்தி இருந்துகொண்டிருந்தாள். அவள் பக்கத்தே சுமாரான வயதுள்ள ஒரு பெண்ணும் இருந்தாள். இவர்கள் இருவரும் தாயும் மகளும் என்பதைப் பின்னர் அறிந்து கொண்டான் சுந்தர்.

இவர்கள் எந்த புகைவண்டி நிலையத்தில் ஏறினார்கள் என்பதை சுந்தர் அறியான்.

[illegible] வாலிபன். அவனை விட்டால் வண்டிக்குள் ஏறி வந்ததும் அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை என்பதற்காக "இந்த ஆண்களுக்கு 'மானேர்ஸ்' தெரியாது என்று இந்தப் பெண் சொல்லலாமா?" என்றார் எதிர்ப்புறத்தில் இருந்த வாலிபர்.

'இந்தக் காலத்துப் 'பேர்ஸன்' புத்திசாலிகள். அவர்கள் இளமையை உபயோகத்தை நன்றாகத் தெரிந்து வைத்துள்ளார்கள். இல்லாவிட்டால் இந்த இடத்தை நீங்கள் காலி பண்ணுவீர்களா?' என்றாள் அந்த இளம்பெண்.

'நான் அந்த இடத்தில் இருந்திருந்தால் காலிபண்ணியிருந்தாலும், நீங்கள் இருப்பதாவது. பயந்தாங்கொள்ளி செல்வராஜா திராணி இல்லாமல் எழும்பி உங்களுக்கு இருக்க இடந்தந்ததற்கு நாங்கள் பொறுப்பாளிகள்' என்றார் அந்த வாலிபர்.

இடத்தைக் காலிபண்ணிக் கொடுத்த செல்வராஜாவை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தாள் அந்த இளம் பெண். செல்வராஜா எதிரில் இருந்த ஆசனத்தில் ஓரமாக இருந்து பக்கத்தில் இருந்த பிரயாணியின் தோளில் சாய்ந்தபடி இருந்தான். கண்கள் அரைக்கண்பட்டுப் போயிருந்தன.

செல்வராஜாவைத் தன் பக்கம் கவர நினைத்த அந்த இளம் பெண் 'புகைவண்டியின் ஆட்டத்திலே தாயின் குறங்கின் சுகத்தைக் கண்டுவிட்டார்கள் போலும்' என்றாள்.

தன்னைப் பார்த்துத்தான் இக்கேள்வியைக் கேட்கிறாள் என்பதை அறிந்த செல்வராஜா தன்னைச் சுதாகரித்துக்கொண்டு 'வேறு என்ன செய்வது புகைவண்டியின் ஆட்டம் அப்படித்தான் இருக்கிறது' என்றான்.

பயந்தாங்கொள்ளி என்று சற்றுமுன் விமரிசிக்கப்பட்ட செல்வராஜாவா அப்படி சாதுரியமாக பேசினான் என்பதை நினைக்கும்போது அவளுக்கு உள்ளூர ஒருவித மகிழ்ச்சிதான்.

செல்வராஜா பார்ப்பதற்கு அவ்வளவு அழகில் சோடை போனவனல்ல. அவனது அரும்பு மீசையும் முகத்தில் தவழுகின்ற புன்சிரிப்பும் அழகான சுருண்ட கேசமும் எந்தப் பெண்ணையும் வசீகரிக்கக்கூடியது தான். அவனையே பார்த்துக்கொண்டிருந்த அவளும் அவனது அழகில் மயங்கத்தான் செய்தாள்.

'உங்களுக்குச் சிரமமில்லாவிட்டால் எனக்கு ஒரு சிறு உதவி செய்வீர்களா?'

புகைவண்டியிலிருந்த ஏனையோர் வண்டியின் ஆட்டத்தில் லயித்துக்கொண்டிருந்தார்கள். வண்டியும் கல்லோயாச் சந்தியில் நீண்ட பெருமூச்சுவிட்டு நின்றது.

'உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்.'

'எனக்கும் அம்மாவுக்கும் இரு கோப்பைத் தேநீர் வாங்கி வருவீர்களா?'

'ஓ தாராளமாக' என்று கூறிக்கொண்டு வண்டியை விட்டு இறங்கிக் கடையை நோக்கிச் சென்றான். சிறிது நேரத்தில் ஒருசில [illegible] பழங்களோடும் [illegible] இரண்டோடும் வந்தான் செல்வராஜா.

வெளியில் நின்றபடி 'இந்தாருங்கோ' என்றுதான். கொண்டுவந்தவற்றை அந்த மங்கையினிடம் நீட்டினான்.

'இதை ஏன் வாங்கினீர்கள்?' என்று கேட்டபடி வாங்கிக்கொண்டாள் அவள்.

மீண்டும் சென்று அவன் வருவதற்குள் தன் மகளிடம், 'நல்ல பிள்ளை, இருந்த இடத்தையும் தந்து வேலைக்காரன் மாதிரி கடையிலிருந்து சாமான்களையும் வாங்கி வருகுது. யாரோ எந்த ஊரோ' என்று தாய் கூறியது மகளுக்கு உச்சியில் பூப் பூத்தது போலிருந்தது.

தேநீர்க் கோப்பை இரண்டுடன் வந்த செல்வராஜா அவர்களிடம் அவற்றை பருகக்கொடுத்து வெறுமையாகிய கோப்பைகளை வாங்கிக் கொண்டான். கோப்பைகளை வாங்கும்போது அவனது கை அவளுடைய கைகளோடு உராய்ந்துகொண்டது. அவள் வேண்டுமென்றுதான் உராய்ந்தாளோ என்னவோ அவனுக்குக் கூச்சமாயிருந்தது.

அவள் யன்னலுக்கு வெளியே தலையை நீட்டி அவனைப் பார்த்தாளோ என்னவோ, ஆகாயத்திலே விண்மீன்கள் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டின.

கரியமேகக் கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு சந்திரன் பவனி வந்துகொண்டிருந்தான். அவன் தனது குளிர்ந்த கரங்களால் அவளது நெஞ்சைத் தொட்டு அவளை விபரிக்கமுடியாத இன்பலோகத்துக்கு அழைத்துச் செல்வது போலவும் அவளும் தன்னை மறந்து அந்த இன்பலோகத்தில் சஞ்சரிப்பது போலவும் செல்வராஜாவோடு தானும் கைகோர்த்துக்கொண்டு தனிமையான காதல் பாதையிலே செல்வதுபோலவும் கனவுக் காட்சியில் மயங்கிப் போயிருந்த இளம்பெண், 'என்ன நீங்கள் சிந்தனை' என்ற செல்வராஜாவின் குரல் கேட்டு, சுய உணர்வு பெற்றாள்.

மீண்டும் அவன் தன் பழைய இடத்தை நாடிய போது 'இதில் அமருங்களேன். அந்த இடம் உங்களுக்குச் சௌகரியமாக இராது' என்றபடிதான் தாயின்பக்கம் நெருங்கி இருந்துகொண்டு தன் பக்கத்திலே இடம் காட்டினாள்.

மணமாகாத ஒரு இளம்பெண் யாரோ வந்தான் வரத்தான் ஒருவனுக்குத் தன்னோடு ஒட்டி உறவாடி இருக்கக்கூடிய விதத்தில் இடம் கொடுக்கிற அளவுக்கு பரோபகார சிந்தை நீண்டுவிட்டதைப் பார்க்கச் சகிக்காத பழங்காலத்துப் பேர்வழி ஒருவர் இறங்கி வெளியே போய்விட்டார்.

பெட்டியினுள் எங்கும் இருள் மண்டிக் கிடந்தது. புகைவண்டி கல்லோயாவுக்கு வந்ததும் நாளும்பொழுதும் நடைபெறும் நிகழ்ச்சியே இது.

இளம் பெண்ணின் பக்கத்தே அமர்ந்துகொண்ட செல்வராஜாவிடம் தன்னை இன்னார் என்று அறிமுகம் செய்து வைத்ததும் அவளது வரலாற்றை அறிய முற்பட்டான் அவன்.

செல்வராஜா சொன்னது இவ்வளவுதான்: அவன் சீனக்குடாவில் ரி. ரி. ஏயில் ஒரு சாதாரண லிகிதர். மாதம் ரூபா முன்னூற்றுத் தொண்ணூறு சம்பளமாகப் பெறுகிறான். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன். பல வருடங்களாக இத் தொழிலை மேற்கொண்டுவருகிறான். அவனுக்கு மூன்று அண்ணன்மார்களும் இரு அக்காமார்களும் ஒரு தம்பியும் இருக்கின்றனர். இரு வருடங்களுக்கு முன்னர் தங்கை திரவியம் நெருப்புக்

(9ம் பக்கம் பார்க்க)

உற்பத்தியைப் உள்நாட்டு
பெருக்கவும், வெளிநாட்டு
செலாவணியை சேமிக்கவும்
பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க
நம்பிக்கையான வியாபாரிகளிடம்
இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலியில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் கழித்து, பூமிக்குத் திரும்பி வரத் தொடங்குவார்கள், அம்புலியை வென்ற வீரர்கள்.

அடுத்து நடக்கும் பயணங்களில் மற்றவர்களும் அம்புலி செல்வார்கள். இவர்கள் நெடுங்காலம் அங்கு தங்கி, அதிக அளவில் நிலவுக் கற்களை சேகரித்து, ஏராளமாகப் படங்கள் எடுத்து விரிவான விஞ்ஞானச் சோதனைகள் நடத்தி, அம்புலியின் பெரும் பகுதிகளை நன்கு ஆராய்ந்துவருவர்.

ஆனால், பின்னர் போகும் மற்றவர்கள் என்னதான் அரும்பெரும் செயல்கள் புரிந்தாலும், உலக வரலாற்றில் 11வது அப்பாலோ விமானிகளுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு; அதுதான் அவர்கள் முதலில் அம்புலியில் இறங்கிய மாவீரர்கள் என்னும் புகழ்.

அம்புலியில் முதலில் அடி எடுத்து வைப்பவர்: நீல் ஆம்ஸ்டராங்; அடுத்துச் செல்பவர் எட்வின் ஆல்டிரின் தாய்க் கப்பலில் தங்கி அம்புலியை வலம் வருவர். மைக்கேல் காலின்ஸ்.

## தமிழ்நாடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டித் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது.

அண்மையில் இலங்கை வந்து திரும்பியபின் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் பிரஜாவுரிமை வழங்குவதில் இலங்கை அரசின் அசமந்தப் போக்கினைக் கண்டித்ததுடன், இலங்கையின் இப்போக்கு திருந்தாவிட்டால் இலங்கையும் ஒரு 'கோலாலம்பூர்' ஆக மாறலாம் என்றும் இனக்கலவரம் மூளலாம் என்றும் எச்சரித்திருந்தார். இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி டெல்லியை தமிழக அரசு தூண்ட வேண்டுமெனவும் கோரியிருந்தார். இதைத் தொடர்ந்தே தமிழ்நாடு அரசு இலங்கை அரசின் போக்குக் குறித்து இடித்துக் கூறி நடவடிக்கை எடுக்கும்படி டெல்லியிடம் வற்புறுத்த இருப்பதாகத் தெரிகிறது.

## கொழும்பு பல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல பொருளாதாரத்துறைக்கு ஒரு பேராசிரியர், 15 விரிவுரையாளர்கள், ஒரு 'டியூட்டர்' பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் எஞ்சியுள்ள காலி இடங்களில் 5 இடங்களாவது தமிழ்ப் பிரிவுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

"இப்படிச் செய்தால் மட்டுமே கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவு கஷ்டமின்றி தொடர்ந்து இயங்க முடியும்.

"மற்ருேர் முக்கிய விடயமென்னவென்றால், இப்போது பொருளாதாரத் துறைக்கு தமிழ் மொழி விரிவுரையாளர் ஒரேயொருவர் மட்டுமேயிருக்கிறார். அவர் சுகவீனமாகப் படுத்தாலோ அல்லது வகுப்புக்கு வர முடியாமற் போனாலோ அவரது வேலையைக் கவனிக்க குறைந்தது இன்னுமொருவராவது வேண்டாமா?"

இப்படி மனத்தாங்கலோடு தெரிவித்தார் அப்பேராசிரியர்.

## ஆதீனத்தின் மறுப்பும் தினசரிகளின் செய்திகளும்!

திரு பொன்னம்பலத்தை அரசியல் துறவு பூணும்படி குருமகா சந்நிதானம் தவத் திரு. சோமசுந்தர அடிகளார் கூறவில்லையென அவரது காரியஸ்தர் என்று கூறப்படும் பொன். முத்தையன் என்பவர் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக வீரகேசரி, தினபதி, டெயிலி மிரர் ஆகிய மூன்றுஏடுகளும் வெளியிட்ட செய்திகளைக் கீழே தருகிறேம். மதுரை ஆதீனம் அப்படியொரு கருத்தைக் கூறவில்லையென்ருல் - ஒன்றுக்கொன்று மாறுபட்ட மூன்றுநாள் ஏடுகளும் எப்படி ஒரே மாதிரியான செய்திகளை வெளியிட்டன என்று தான் நமக்குத் தெரியவில்லை. வாசகர்களே கண்டுபிடித்துக் கொள்வார்களாக.

"தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை அரசியல் வாழ்வைத் துறந்து சமயத் துறைக்கு வருமாறு மதுரை ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர திருஞான சம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அழைப்பு விடுத்தார்.

"நாவலர் மாநாட்டில் பேசிய அவர் இதுபற்றிப் பிரஸ்தாபித்தார். அண்மையில் திரு. பொன்னம்பலம் எம். பி.யை தாம் சந்தித்த போது தேவையான பணம் சம்பாதித்து விட்டீர்கள். இனி சமயத்துறைக்கு வந்து அதன் வளர்ச்சிக்குப் பணி புரிவோம் வாருங்கள் என அழைப்பு விடுத்ததாயும் இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் என திரு. பொன்னம்பலம் பதில் கூறியதாயும் சொன்னர்.

வீரகேசரி
2—7—69

மதுரை ஆதீனமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

"..........................................

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது என்னைச் சந்தித்தார். நான் அவரைப் பார்த்து "உங்களுக்கு வயதாகி விட்டது அரசியலையும் சட்டத் துறையையும் உதறி எறிந்துவிட்டு சமயப் பணி செய்ய வாருங்கள்" என்று கேட்டேன்.

தினபதி
1—7—69

JAFFNA, Tuesday

An appeal to Mr. G. G. Ponnambalam, leader of the Tamil Congress and MP for Jaffna to quit politics and take up religious work was made by the chief incumbent of the Madurai Athenam, Sai La Sri Somasundara Sri Gnanasampantha Thesika Paramacharya Swamikal who is now in Ceylon to participate in the Arumuga Navalar conference which opened in Jaffna on Sunday.

Speaking on the second day of the conference now being held at the open air theatre here the swamikal said that when he met Mr. Ponnambalam on Sunday and asked him to quit politics and join him to do religious work-to propagate the Hindu religion.

"I told him that as he had made enough money and achieved enough fame he should now quit politics and join me to serve God.

But the reply Mr. Ponnambalan gave me was "Wait swamiji for some time"

'—Daily Mirror'
3-7-69

## இருவித உணர்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சலுக்கு இரையாகிவிட்டாள். அவளுடைய நினைவு அவனை விட்டு நீங்க பல மாதங்கள் சென்றன, வருடங்கள் இரண்டாகிவிட்டபடியால் ஓரளவு அவன் நினைவு சுச்சான காற்றுக்கு அள்ளுப்பட்டுச் செல்கின்ற மணற் குவியலைப் போன்றதாகிவிட்டது.

'எதிர்பாராதவிதமாக ... 'உன்னைக் கண்டதும் என் தங்கையின் நினைவு மீண்டும் என் நெஞ்சில் பளிச்சிட்டது. என் தங்கை என்ன சாயலை உடையவளோ அதே சாயலோடு நீ இருக்க என் மனம் உன்னைத் தங்கையாகக் கண்டது. அவளது குறும்புப் பேசும் மலர்ந்த முகமும், மாதுளம் விதைபோன்ற அழகான பல் வரிசையும் கருணை பூண்டுகொண்டிருக்கும் தேசமும் சேர்ந்து உன்னை எனது தங்கையாகவே காணமுடிகிறது' என்று செல்வராஜா கூறிய போது அவனது கண்களிலிருந்து தெறித்துச் சிந்திய கண்ணீர்த் துளிகள் பக்கத்திலிருந்த செல்வராஜாவின் 'தங்கை' முகத்தில் பட்டு அனலாகச் சுட்டது.

புகைவண்டி சிறுக்குடாவை அடைந்ததும் கண்களைத் துடைத்துக்கொண்டு தன் பெட்டியைக் கையிலே ஏந்தி, வண்டியை விட்டுக் கீழிறங்கி தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான் செல்வராஜா. அவன் செல்லும் திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

சுந்தரும் நீண்டதொரு பெருமூச்சை விட்டுத் தன்னூர் நோக்க சிறுக்குடாவில் இறங்கிக்கொண்டான்.

(யாவும் கற்பனை)

## தமிழர்களுக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரிக்கைகளும் புத்தகங்களும் வரவழைக்கப் படுகின்றன. இவைகளுக்காகக் கோடிக் கணக்கான இலங்கைப்பணம் தமிழ் நாட்டிற்கு போகிறது. இப்புத்தகங்களும் பத்திரிகைகளும் தமிழகத் தி. மு. க.வின் பிரச்சாரங்களேயாகும். தமிழ்ப் படம் மூலம் இலங்கைப் பணம் கோடிக் கணக்கில் இந்தியாவுக்கு அனுப்பப்படுகிறது இவைகளைத் தடை செய்யப் பிரதமர் தயங்குகிறார். நாம் ஆட்சிக்கு வந்தால் முற்றுகத் தடைசெய்வோம்.

'தி. மு. க. அரசு இலங்கை மீது படையெடுக்க நேரம் பார்த்து வருகிறது. சிங்கள மக்கள் இது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## செல்வாவுக்கு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவே வாழ்ந்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காகவே உழைப்பேன்" என்றவாறு திரு. செல்வநாயகம் அப்போது கூறிவிட்டார். அன்று நடந்த இந்த உண்மைகள் அனைத்தையும் திரு. பொன்னம்பலம் நன்கறிவார். ஆனால் இன்று எல்லாவற்றையும் மறைத்து திரு. செல்வநாயகத்தின் மீது அபாண்டம் கற்பிக்கிறார்.

தமிழரசுக் கட்சி பொய்யிலே தோன்றி, பொய்யிலே வளர்ந்து, பொய்யே பேசி வருவதால் தமிழ் மக்கள் அதை நம்பக் கூடாது என்று கூறுகிறார் திரு. பொன்னம்பலம் பொய் உரைக்கக் கூடியதா திரு. செல்வநாயகத்துடையதா அல்லது திரு. பொன்னம்பலத்துடையதா என்பதை நாடு அறியமாட்டதா?

### ஏமாற்றம் அடைந்தார்!

தாம் வைத்த மந்திரிப் பொறியிலும், விரித்த பதவி வலையிலும் திரு. செல்வநாயகம் சிக்க மறுத்ததை அறிந்த திரு. டி. எஸ். சேனநாயகா ஏமாற்றமடைந்தார். என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

தமிழ் காங்கிரஸிலிருந்து ஒருவரை மந்திரி சபையில் இழுத்துப்போட திரு. டி. எஸ். சேனநாயகா விருப்பம் கொண்டிருக்கிறார் என்பதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அறிந்ததும், இரகசியமாக திரு. சேனநாயகாவிடம் தூது அனுப்ப ஆரம்பித்து விட்டார் திரு. பொன்னம்பலம். தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த இதர பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் திரு. சேனநாயகாவைச் சந்திக்கவும் அவரிடம் இழிந்து குழைந்து பேசவும் தலைப்பட்டார்.

### இரகசிய ஒப்பந்தம்

சிங்கக் கொடிப் பிரச்னையில் உறுதியாக நின்றிருக்க வேண்டிய திரு. பொன்னம்பலம், சிங்கக் கொடியில் ஒரு மானங்கெட்ட கோட்டை ஏற்றுக் கொண்டு திருப்தியடைந்தார். இதற்கு காரணம் சிங்கக் கொடியின் ரூபத்தை மாற்றாமல் ஏற்றுக் கொண்டால் விரைவில் திரு. பொன்னம்பலத்தை ஒரு மந்திரியாக்குவதாகவும், அவருக்கு கே. சி. பட்டம் தருவதாகவும் திரு. சேனநாயகா இரகசிய தூது அனுப்பி அறிவித்திருந்ததுதான்.

அற்ப மந்திரிப் பதவிக்காகவும், ஒரு கே. ஸி. பட்டத்துக்காகவும் சிங்கக் கொடியை ஏற்ருர்; மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு எழுத்தில் கொடுத்த வாக்குறுதியை மறுத்தார்; அநியாயமான பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்களை ஆதரித்தார்; நம்பிய தமிழ் மக்களை நட்டாற்றில் கைவிட்டார்.

### சா. ஜே. வே. எச்சரிக்கை

"மந்திரிப் பதவியை ஏற்காதே நம்பிய தமிழ் மக்களை நடு வழியில் கைகழுவாதே. நம்பிக்கைத் துரோகம் பொல்லாதது. உன் அரசியல் எதிர்காலத்தையே அழித்து விடும். ஒரே நிலையாக உறுதியோடு நில். தமிழ் பேசும் மக்களின் முடிசூடா மன்னனாக விளங்குவாய் தளராதே" என்று திரு. பொன்னம்பலத்தை மீண்டும் மீண்டும் நட்புறவோடு அந்தரங்கமாக எச்சரித்தார் திரு. செல்வநாயகம்.

கேட்கவில்லை திரு. பொன்னம்பலம், புறக்கதவு வழியை நாடினார்: தமிழ் மக்களின் முடிசூடா மன்னனாக மதிப்புடன் சுதந்திரமாய் இருப்பதை விட சேனநாயகாவின் மந்திரி சபையில் ஒரு அடிமை மந்திரியாய் இருப்பது மேல் என்று எண்ணி அந்த அற்ப பதவியின் மீது ஆசை கொண்டார் பதவி மோகையால் அறிவு மயங்கிய திரு. பொன்னம்பலம்!

ஒரு கேடுகெட்ட......யைப் போல திரு. சேனநாயகா வாழ்ந்த 'டெம்பிள் ட்ரீஸ்' மாளிகைக்குள் முழந்தாளில் தவழ்ந்து சென்றார். சேனநாயகா முன்பு மண்டியிட்டார்; வணங்கினர் வாழ்த்துக் கூறினர். சேனநாயகாவின் இடது கையைத் தமது இரண்டு கைகளாலும் பற்றி முத்தமிட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்!

எதிர்த்து நின்ற சேனநாயகாவிடம் சரணடைந்தார், பொருதி நின்ற யூ. என். பி. யுடன் சங்கமமானார்.

### துரோகி கூறுகிறார்!

தமிழ் பேசும் மக்களின் மானத்தை, மதிப்பை, மரியாதையை எத்தனையோ விலை கூறி விற்ற இந்தத் துரோகிதான் இன்று வெட்கமில்லாமல் கூறுகிறார்;

"மந்திரிப் பதவிக்கு திரு. செல்வநாயகத்தை சிபார்சு செய்தேன். சேனநாயகா [illegible] நான் ஏற்றுக் கொண்டேன்" என்று.

## செத்துப்போன...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே நிர்வாகக் குழுவினர் யாரையும் அழைக்காமல் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வரும் தீர்மானம் 'செயற்குழுவில்' எப்படி விவாதிக்கப்பட்டது? இதிலிருந்து செத்துப்போன சங்கத்தின் செயலாளர் என்ற பெயரை உபயோகித்து பண்டிதர் அவர்களைப் பழிவாங்க பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்ட "கூடாரக் கூட்டத்தின்", 'லெட்டர் ஹெட்' அறிக்கை இது என்பது தெரிகிறதல்லவா? இதைவிட அற்பத்தனமான - படுகேவலமான செயல் வேறு என்ன இருக்க முடியும்?

செத்துப்போன மன்றத்தின் செயலாளர் என்றுகூறிக் கொண்டு இந்த துரோகப் பிறவி நடத்தும் இத்தகைய தில்லுமுல்லுகளால், பண்டிதருக்கு எவ்வித களங்கமும் ஏற்பட முடியாது. ஏனெனில் பண்டிதர் சாதாரண ஏழைத் தமிழர்களின் பிரதிநிதி. பண்டிதரின் உயர் உள்ளத்தை ஒவ்வொரு தமிழனும் தெரிந்துவைத்திருக்கிறான். ஆனால் இதனால் அவமானம் இலங்கையிலுள்ள ஏனைய தமிழ் எழுத்தாளர் மன்றங்களுக்கும், தமிழ்எழுத்தாளர்களுக்கும்தான்!

## அடுத்தவாரம்

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இசை விழாபற்றிய "மூவர்ணன்" எழுதும் விமர்சனம்.

அன்னுகாவியம் ஆகியவை இடம் பெறும்.

ஆ—ர்


## ஒரு ரகசிய மருந்து!

ஆண்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டது!

ஜனனேந்திரம் தளர்ச்சியடைந்த ஆண்கள் மாத்திரம் விபரங்கட்கு கேட்டெழுதுங்கள்.

வைத்திய நிபுணர்:

பீ. எம். திஸ்ஸாநாயக்க,

த—பெ—இல—1281, கொழும்பு-103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழால் முடியுமா என்பது பழைய வினா!

# தமிழில்தான் முடியும் என்பது புதிய விடை!

## ஆங்கிலச் சொற்களை நினைக்குமளவுக்கு தமிழ் சொற்களை நாம் நினைக்கின்றோமா?

## அலுவலகங்களில் ஆங்கிலத்துக்குப் பதிலாக பயன்படக்கூடிய சில தமிழ் சொற்கள்!

அலுவலகங்களிலே எந்நேரமும் முழுங்குகின்ற ஒரு சொல் Urgent என்னும் சொல்லாகும். இச்சொல்லை எளிதில் மொழிபெயர்க்கலாம். "அவசரம்" என்னும் சொல் மிகவும் பழைய சொல். Very Urgent என்னும் சொற்களை "மிக அவசரம்" என்று சொல்லலாம். "விரைவு" என்னும் சொல்லையும் பயன்படுத்துகின்றார்கள். "வினைசெயல் வகை" என்னுமோர் அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துள்ளாரல்லவா? விரைந்து வினை செய்வதை அவர் அங்கே வலியுறுத்துகின்றார்!

"தூங்குக தூங்கிச்
செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை"

என்னும் அரிய வாக்கினை நாம் என்றும் மறத்தல் இயலாது.

"தூங்குதல்" என்னும் சொல்லை ஏனோ இங்குத் தேர்ந்தெடுத்துள்ளார்? அலுவலகங்களிலேயே அயர்ந்து உறங்குவோர் வள்ளுவர் காலத்திலேயே நிறைந்திருப்பார்களென நாம் ஒருவாறு உணரலாம்! எந்த கோப்பினை (File) உடனே கவனிக்கவேண்டும். எந்தக் கோப்பினை ஒத்திருந்து பார்க்கலாமென்பதனை உணரவேண்டும்.

"விரைந்து தொழில்
கேட்கும் ஞாலம்
நிரந்தினிது
சொல்லுதல்
வல்லார்ப் பெறின்"

"விரைவு" என்னும் சொல்லை வள்ளுவர் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளார். Very Urgent "மிகு விரைவு" என்று எழுதலாம். Express வண்டிகள் இருக்கின்றன. பேருந்துகளிலும் Express உண்டு. தொடர் வண்டிகளிலும் Express உண்டு. இவ்வண்டிகளை "விரைவு வண்டி" என அழைக்கின்றார்கள். "விரைவு வண்டி" என்பதனை ஒருவர் "விறகு வண்டி" என்று படித்தாராம்! அச்செய்தி நமக்குத் தேவையில்லை.

"சுறுக்கென வந்து சேர்" எனச் சிற்றூர்களில் சொல்வார்கள். 'கடிதிற்கொணர்க' எனப் புலவர்கள் எழுதுவார்கள். 'ஒல்லையிற் செய்தால் தொல்லையில்லை' என்பார்கள். 'தெற்றென' என்னும் சொல்லுக்கு 'விரைவாக' என்னும்பொருளுமுண்டென நாலடியார் நமக்குக் காட்டுகின்றது. அலுவலக ஏடுகளில் நாம் பின்வரும் வகையிலெல்லாம் எழுதலாம்:

'இதனை விரைவாகக் கவனிக்கவேண்டும்'

'சுறுக்கெனக் குறிப்பு வரையவும்'

'மூலக் கோப்பினைக் கடிதிற் கொணர்க'

தமிழ்ச்சொற்கள் கொஞ்சி விளையாடுவதைக் கண்டு மகிழலாம்.

'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நானடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்'

எனப்பாடுகின்றார் மணிவாசகர். விரைகின்றேன், பெரிதும் விரைகின்றேன், மிகப் பெரிதும் விரைகின்றேன் என அவர் விளக்கியுள்ளார். Urgent, Special, Immediate, என்னும் மூன்று ஆங்கிலச் சொற்களை இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

Please take urgent action—விரைக.

Please treat this as special—பெரிதும் விரைக.

Please treat this as 'Immediate' — மிகப்பெரிதும் விரைக.

இவ்வாறு நாம் கோப்புகளிலே எழுதுவோமாயின், கோப்புகள் தமிழ் மணம் பெறுமென்பதில் தடையுண்டோ?

Urgent என்னும் சொல்லை அடுத்து, நாம் நினைக்கக்கூடிய வேறொரு சொல் Delay என்னும் சொல்லாகும். இச்சொல்லும் அலுவலகங்களில் எந்நேரமும் முழங்கிக்கொண்டிருக்கும்! அலுவலகத்தில் பணியாற்றுவோர் இச்சொல்லை அடிக்கடி பயன்படுத்துவார்கள், அலுவலகத்திற்கு வருகின்ற வெளியார்களும் இச்சொல்லை மிகுதியாகப் பயன்படுத்துவார்கள்!

ஓர் அலுவலர் இன்னொரு அலுவலரைப் பார்த்து 'You have delayed this file' என்று சொல்லுவார்! அவருக்கும் மேற்படியின் அமர்ந்துள்ளவர், இதே வாக்கியத்தை இவருக்குச் சொல்லுவார்! ஒருவர் மற்றொருவர் [illegible] Delay என்னும் சொல் [illegible] தாமதம் [illegible] இந்தச் சொல்லைத் தாமதம்" என மொழிபெயர்க்கின்றோம். "தாமதம் என்னும் சொல்லைத்தவிர வேறு சொற்கள் இல்லையா என்றும் வினவினை எழுப்புவோம்" "உண்டு" என்னும் விடை உடனே கிடைக்கும் "தவக்கம்", "கணக்கம்" என்னும் சொற்களைப் பலர் மறந்து போயிருக்கக் கூடும்! ஆங்கிலச் சொற்களை நினைத்துப் பார்க்கும் அளவுக்கு தமிழ்ச் சொற்களை நினைத்துப் பார்ப்பதில்லையே.

"Bad delay" என்பதை ஒருவர் 'படுதாமதம்' என்று மொழிபெயர்த்து விட்டார்! 'படுமோசம்' என்னும் சொற்களைத் தம் பேச்சிடையே அடிக்கடி சொல்லும் வழக்கம் அவருக்கு இருந்திருக்கலாம்! 'நீண்ட தாமதம்' என்பதுதான் தமிழ் முறைக்குச் சிறப்பாக அமையும். "He will take sometime for a decision to be taken" என்னும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இதனை 'முடிவு எடுக்க இன்னும் சில நாட்கள் ஆகும்' என எழுதுவதே சிறப்பாக அமையும்; தமிழில் எழுதும்போது 'நாட்கள்' என்னும் சொல் மாதங்களையும் ஆண்டுகளையும்கூடக் குறிக்கும். 'Bad delay' என்றால் 'நீண்ட தாமதம்' என எழுதலாம் எனக் கண்டோம்.

'Why delay' என அலுவலர்கள் எழுதிக் கேட்பார்கள். இதனைச் 'கணக்கம் ஏன்' என அழகு தமிழில் அமைத்துக்காட்டலாம். 'Delay should be avoided' எனச் சிலர் பக்குவமாக எழுதுவார்கள். இதனை நாம் தவக்கத்தைத் தவிர்க்கவேண்டும்' என மோனையோடு மொழிபெயர்க்கலாம்.

சினம் தோன்றிவிட்டால் 'Explain delay' என்று எழுதிவிடுவார்கள். 'காலந்தாழ்ந்திற்கு விளக்கம் தேவை' என இனித் தமிழில் சொல்லலாம் 'Explain' 'Explanation' என்னும் சொற்கள் பணியாளர்களை அச்சுறுத்தும் சொற்களாகும். 'விளக்கம்' எனச் சொல்லும்போது கடுமை குறைந்து பொருட் சிறப்புப் பொருந்தி நிற்பதைக் கண்டு களிக்கலாம்! இதனை நோக்கும்போது தேன்மொழியாகிய தமிழ்மொழியைத் தேன் மொழி எனச் சொல்வதன் நயம் நன்கு விளங்கும். 'நெடுநீர்' என்பதும் தாமதத்தையே குறிக்கும் என்பதையும் ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும்.

தமிழ்ச் சொற்கள் தங்கக் கம்பி போன்றவை. மிக நுட்பமாக மாறுதல்பெற்று, புதுப் புதுப் பொருட்களை நல்கவல்லவை. சின்னஞ்சிறு மாற்றங்களால், புதுப்புது வண்ணங்களை வழங்க வல்லவை. இதோ சில எடுத்துக் காட்டுகள்:—

| | |
|---|---|
| தேர்வு | Examination |
| தேர்தல் | Election |
| முடிவு | Result |
| முடிபு | Resolution |
| முகவுரை | Preface |
| முகப்புரை | Preamble |
| தீர்வு | Disposal |
| தீர்ப்பு | Judgment |
| துணிவு | Courage |
| துணிபு | Firm Conviction |
| பார்வை | Reference |
| பார்வையிடல் | Inspection |
| அறுவை | Operation |
| அறுப்பு | Harvest |

இதன் தொடர்பாக என்னதொடங்கினால், எத்தனையோ எடுத்துக்காட்டுகள் தோன்றும். இன்பம் பெருக்கெடுத்து ஓடும். 'எனக்குக் காய்ச்சலாக இருக்கின்றது. இன்று மட்டும் ஒரு விடுப்பு (Casual leave) தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.' என எழுதிப்பார்த்தால் ஆற்றொழுக்குப்போல் ஓடுகின்றது. தமிழில் எழுதும் விண்ணப்பம் அமிழ்தம் போல இனிக்கின்றது.

'தமிழில் முடியாது' என்று சொல்பவர்கள் உண்டு' 'எங்களால் முடியாது' என்பதைத்தான் அவர்கள் சொல்வதாக நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். 'முடியாது என்பது தமிழில் கிடையாது' எனச் சொல்வார்கள். இதுதான் உண்மை. உண்மை என்பது மட்டுமன்றி உறுதியும் ஆகும். 'தமிழில் முடியுமா?' என்னும் வினா பழைய வினாவாகும். 'தமிழில்தான் முடியும்' என்பது அதற்கொரு புதிய விடையாக அமைவதைக் கண்டு நாம் அகமகிழலாம்.

நன்றி: செந்தமிழ்ச்செல்வி

கோ. முத்துப்பிள்ளை பி. ஏ.

# சங்கப் பலகை

## இளம்பிறை

(மீலாத் மலர்)

விலை: ஒரு ரூபா.

'இளம்பிறை' இதழின் ஐந்தாம் ஆண்டு மலர் 'மீலாத்' மலராக 160 பக்கங்களில் சிறப்புற மலர்ந்திருக்கிறது. அழகான வண்ணத்தில் ஜாமிஉல் அழ்ஹர் பள்ளிவாசலின் எழில்தோற்றத்தை அட்டையில் தாங்கி வெளிவந்துள்ள இம்மலரின் ஒவ்வொரு பக்கத்திலும் கருத்துக் கருவூலங்கள் நிரம்பி வழிகின்றன!

அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பற்றிய விபரங்கள், எம். ஏ. ரகுமானின் பத்து நபி கதைகள், 'பயணங்கள்' எனும் உரைச் சித்திரம். வை. அஹ்மத், மொயின் சமீன், எஸ். எல். எம். ஹனிபா ஆகியோரது முத்துப் போன்ற மூன்று சிறுகதைகள், அண்ணல், வி. அந்தவனம், சக்தி பாலையா ஆகியோரது கவிதைகள் ஆகியன மலரை அழகு செய்கின்றன. ஈழத்து முஸ்லிம்களினார்கள், ஈழத்து முஸ்லிம் கதைஞர்கள் ஈழத்து முஸ்லிம் பத்திரிகையாளர்கள் - எனும் மூன்று கட்டுரைகளும் ஈழத்துத் தமிழ்வளர்ச்சித்துறையில் முஸ்லிம்களின் பங்கை ஓரளவு கோடிகாட்டுகின்றன. இளம்பிறையின் முயற்சி போற்றத்தக்கது என்பதில் ஐயமில்லை.

## மத்தாப்பு

(மாத இதழ்)

ஆசிரியர்:
மகிழ்ச்சிக்கண்ணன்.

விலை: சதம் 35.

தமிழகத்திலிருந்து வெளிவரும் சிறுவர்க்கான மாத ஏடு—மத்தாப்பு. இந்த இதழில் உள்ள ஒரு புதுமை என்னவென்றால் ஈழத்துச் சிறுவர் சிறுமிகள் எழுதும் படைப்புக்களுக்கென நான்கு பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதுதான். 'மத்தாப்பு' ஏட்டின் இலங்கை ஆசிரியராக திரு. புதுமைலோலன் பொறுப்பேற்றிருக்கிறார். இலங்கை மத்தாப்பு மன்றத்தில் சேருவதற்கான விண்ணப்ப பத்திரமும் இவ்விதழில் தரப்பட்டிருக்கிறது. இவ்வேட்டுக்கு எழுத விரும்புவோர் புதுமைலோலன் 550/7, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தங்கள் கட்டுரை கதை, கவிதைகளை அனுப்பலாம். இலங்கை - இந்திய கூட்டு முயற்சியில் இப்படியொரு சிறுவர் இதழ் தோன்றியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. கிடைக்குமிடம்:— அன்பு புத்தகசாலை, 27 டி, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## இஸ்லாமிய இனம் ஒழிந்துபோமா?

ஆசிரியர்:
அனாத் மௌலானா.

விலை: ரூபா ஒன்று.

ஈழத்து முஸ்லிம்சமுதாயத்திலிருக்கும் பல குறைநிறைகள் துணிச்சலுடன் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. ஈழத்து முஸ்லிம்கள் இன்னொல்லாத்தை புரிந்து இஸ்லாமியர்களாக வாழாவிட்டால் இஸ்லாமிய இனம் ஈழத்தில் இருக்குமிடம் தெரியாமல் அழிந்துவிடும் என்று முடிவாக அழுத்தமாக கூறும் இதன் ஆசிரியர், முஸ்லிம்களின் தாய்மொழி எது என்பதை கண்டுபிடிக்க மாநாடு கூட்டியதை, பெற்றவள் உயிரோடிருக்க பெற்றவள் யார் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வதுபோன்ற பேடிமைச் செயல் எனச் சாடுகிறார். ஒவ்வொரு இஸ்லாமியனும் படிக்கவேண்டிய நூல் இது — கிடைக்குமிடம் வளர்பிறை வாலிபர் வெளியீடுகள், 224, வெயாட்வீ புரொட்வே, கொழும்பு 10.

## நெடுந்தீவு சமூக முன்னேற்ற சங்கம்

நெடுந்தீவு சமூகமுன்னேற்றச் சங்க 9ம் ஆண்டு நிர்வாகஸ்தர்களாக கீழ் காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். காப்பாளர் திரு. எஸ். சுவாம்பிள்ளை, தலைவர் திரு: ரீ மரியாம்பிள்ளை, உபதலைவர் திரு: ரி. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர் திரு. க. கணபதிப்பிள்ளை உபசெயலாளர் திரு. அ. யோ. சத்தியபால், பொருளாளர் திரு. எஸ். புவேந்திரன், உபபொருளாளர் திரு. சி. கணபதிப்பிள்ளை, கணக்குப்பரிசோதகர் திரு. பி. பிரான்சிஸ் சேவியர். நிர்வாகசபை உறுப்பினர்கள்: திரு. ச. அருளப்பு, திரு. க. கோபால், திரு. க. ஆறுமுகம், திரு. மோ. பக்கிரியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கு

அன்புமிக்க தம்பி தங்கைகளே,

மீண்டும் சுமூகமான மாணவர் அரங்கு மீண்டும் ஆரம்பமானது பற்றி தம்பி தங்கையர் பலர் மகிழ்ச்சி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் நன்றி. சிறு சிறு விஷயங்களாக எழுதியனுப்புங்கள். மாணவர் அரங்கில் அவை இடம் பெறும்.

சுதந்திரன் மாணவர் படை ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளோம். விரைவில் அதுபற்றிய விபரங்கள் இடம்பெறும். காத்திருங்கள்.

அன்புள்ள,
விஜயா அக்கா.

## விடுகதை

தமிழையும் சைவத்தையும் வளர்க்க இலங்கையில் தோன்றிய ஒரு பெரியார். அப்பெரியாரின் பெயர் என்ன?

அப்பெரியாரின் பெயரின் முதலெழுத்து நாட்டில் உண்டு. நகரத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து வண்மையில் உண்டு. திண்மையில் இல்லை. மூன்றும் எழுத்து லகரத்தில் உண்டு. ழகரத்தில் இல்லை. நான்காம் எழுத்து தர்மத்திலும் உண்டு. அதர்மத்திலும் உண்டு.

**விடை: நாவலர்**

உலகம் போற்றும் உத்தமர் ஒருவர் அவ்வுத்தமரின் பெயர் என்ன?

அவ்வுத்தமரின் பெயரின் முதலெழுத்து வணக்கத்தில் உண்டு. வாழ்த்தில் இல்லை. இரண்டாம் எழுத்து பள்ளியில் உண்டு. பாடசாலையில் இல்லை. மூன்றும் எழுத்து வள்ளுவனில் உண்டு கம்பனில் இல்லை. நான்காம் எழுத்து வரலாற்றில் உண்டு. பரம்பரையில் இல்லை. ஐந்தாம் எழுத்து பாரதியார் என்பதில் உண்டு. கார்மேகம் என்பதில் இல்லை.

**விடை: வள்ளுவர்**

அனுப்பியவர்:-
கோ. சந்திர சேகரம்
பரந்தன்

## உங்களுக்குத் தெரியுமா?

மத்தியதரைத் திறவுகோலெது?
ஜிப்ரோல்டர்

ரேடியம் எதிலிருந்து எடுக்கப்படுகிறது?
பிச்பிளேன்டிலிருந்து.

மேற்கு இந்தியத் தீவுகளில் பெரியது எது?
கியூபா

கடற் கழி அதிகமுள்ள நாடு எது?
நோர்வே

''பிக்பென்'' என்ற கடிகாரத்தை அமைத்தவர் யார்?
பெஞ்சமின்கோல்

நைல்நதியின் நீர் தேக்கப்படும் பெரிய குளமெது?
அஸ்வான்

இரவும் பகலும் சூரியன் தெரியும் நாடெது?
பின்லாந்து.

''பொற்கரை'' என்னும் புனைப்பெயர் எந்நாட்டிற்கு வழங்கப்பட்டது?
கானு

தொகுப்பு:-
அ. அன்ரனிக்கிறிஸ்ரி
யாழ்ப்பாணம்.

# திருடனை விரட்டிய சாத்திரம்

(சிங்களவாடிமூர்த்தி)

வசந்தாவின் குடும்பம் வறுமையிலே வாடிய குடும்பம். ஒரு நாள் தன் கணவனை வேலை ஏதும் தேடி வரும்படி அனுப்பினுள். அவனும் போகும்போது ஒரு கொப்பியும் பென்சிலும் எழுதுவதற்கு எடுத்துக் கொண்டு போனன். அப்போது வழியில் எறும்புகள் கூட்டம் கூட்டமாக அணிவகுத்துக் கொண்டு போய் குழிதோண்டுவதைக் கண்டான். உடனே எறும்புகள் குழி தோண்டுகின்றன என்ற வாக்கியத்தைத் தனது கொப்பியிலே எழுதி விட்டான்.

இப்படியே ஒரு பள்ளிக்கூடத்திற்கு வந்தான். அப்போது ஒரு ஆசிரியர் நட்ட பனை மரம்போல் நின்ருர். உடனே நட்ட பனைமரம் போல் நின்ருர் என்ற வாக்கியத்தையும் கொப்பியிலே எழுதிவிட்டான். இவரைக் கண்ட ஆசிரியர் ''ஏன்டா வந்தாய்'' என்று கேட்டார். உடனே ''ஏன்டா வந்தாய்'' என்ற வாக்கியத்தையும் கொப்பியிலே எழுதிவிட்டான். பின்பு ''ஏன்டா நிற்கிறாய்'' என்று ஆசிரியர் கேட்டார். அதற்கும் பதில் இல்லை. உடனே ''ஏன்டா நிற்கிறாய்'' என்றவாக்கியத்தையும் கொப்பியிலே எழுதி எடுத்துக் கொண்டு போனன்.

பின்பு ''ஏன்டா போகிறாய்'' என்று மீண்டும் கேட்டார். அதற்கும் பதில் இல்லை; உடனே ''ஏன்டா போகிறாய்'' என்றவாக்கியத்தையும் எழுதி எடுத்துக் கொண்டு களைத்துப் போய் வீட்டிற்குப் போனன்.

மனைவி வசந்தாமணி வேலை தேடி வருகிறார் என்று கூறிக் கொண்டு கணவனை நல்ல முறையில் வரவேற்ருள். இரவு நேரமாகி விட்டது. படுத்துறங்கி அதிகாலையிலே எழுந்து தான் எழுதிய வாக்கியத்தைப் பாடமாக்க வேண்டுமென்று ஆயத்தப்படுத்தினர் கணவர். இதற்கிடையில் திருடன் ஒருவன் பலஇடங்களில் பொருட்களை திருடி எடுத்துக் கொண்டு வரும் வழியில் இந்த வசந்தாமணியின் வீட்டிலும் ஏதும் திருடலாம் என்ற நோக்கத்துடன் தான் திருடி வந்த சாமான்களையெல்லாம் கீழே வைத்துவிட்டு வசந்தாமணியின் வீட்டுச் சுவற்றை துளைக்க ஆரம்பித்தான்.

அப்போது அவளதுகணவன் தானெழுதிய வாக்கியத்தை பாடமாக்கத் தொடங்கினர். முதலில் அவரது முதல் வாக்கியமான எறும்புகள் குழிதோண்டுகின்றன—... இதை திருடன் கேட்டுவிட்டான். அடுத்து நட்ட பனை மரம்போல் நிற்கின்ருன்... இதுவும் திருடனுக்குக்கேட்டுவிட்டது. பின்பு ''ஏன்டா வந்தாய்'' என்ற வாக்கியத்தைப் பாடமாக்கினர். இதுவும் கேட்டுவிட்டது. அடுத்து ''ஏன்டா நிற்கிறாய்'' என்றதைப் பாடமாக்கினர். இதற்கிடையில் திருடன் யோசித்தான் தம்மை வீட்டுக்காரன் கண்டு விட்டுத்தான் இப்படி யெல்லாம் சொல்கிறான் என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டு வந்தபொருட்களையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். அப்போது கடைசிவாக்கியமான ''ஏன்டா போகிறாய்'' என்றதைப்பாடமாக்கினன். திருடன் நின்ற இடம் தெரியாமல் ஓடியே விட்டான்.

விடிந்து விட்டது. அவனது மனைவி வாசல் கூட்ட வரும்போது வீட்டிற்குப் பின்னும் திருடன் விட்டுச் சென்ற பொருட்கள் எல்லாம் கிடந்தது. அவளோ கணவனைக் கூப்பிட்டுக் காண்பித்தாள். இவைகள் எல்லாம் எப்படி வந்தன? என்று கேட்டாள். அதற்கு அவனே இதுதான் எனது சாஸ்திரத்தின் மகிமை என்று கூறிவிட்டு, சரி சாமான்களையெல்லாம் எடுத்து உள்ளே வை. இனிமேல் இந்த சாஸ்திரத்தைப் படித்தால் நான் பிடிபட்டு விடுவேன் என்று கூறிவிட்டுத் தனது கொப்பியைக் கிழித்தெறிந்தான்.

இப்படி நடக்குமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

# மாடு

(எம். எச். எம். அஷ்ரப்)

மாடு புல்லை மேய்கிறது
மணியின் ஓசை கேட்கிறது
வீட்டின் ஓரம் நின்றபடி
மெதுவாய் மாடு
மேய்கிறது!

வாலைச் சுழற்றி அடிக்கிறது
வண்டும் இரைந்து
பறக்கிறது
வேலை பலவும் செய்கிறது
விரும்பும் நேரம்துயில் கிறது!

தாக உணர்ச்சி வருகிறது
தண்ணீர் குடிக்கச்
செல்கிறது
மேகம் இருண்டு விடுமுன்னே
வீட்டை வந்து அடைகிறது!

நல்ல புல்லை உண்கிறது
நச்சுப் பயிரை விடுகிறது
மெல்ல அமர்ந்து தின்றதை
மெதுவாய் அதுவும்
மீட்கிறது!

## கண்டுபிடித்தவர்கள் யார்?

மயக்க மருந்தை கண்டு பிடித்தவர் யார்? —ஜே.சிம்சன்.

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி யார்?
—சேர். சந்திரசேகர வெங்கடராமன்.

கொலம்பஸ் அமெரிக்காவுக்கு சென்றடைந்த கப்பலின் பெயர் யாது?
—சான்ரா மரியோ.

நீராவிக்கப்பலை கண்டுபிடித்தவர் யார்?-ஜேபேற்புலரன்;

சாய்ந்த கோபுரம் எங்கேயுள்ளது?
பைசா நகரில் உள்ளது.

தொகுப்பு: மூ. சிவபாலன் முளாய்.

## அண்ணா கால்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இதை அண்ணாத்துரை உயிருடன் இருந்தபோது கூறியிருக்கலாமே. போகவிட்டுப் புறம் கூறுபவர்கள் போல, அவர் இறந்தபின்பு ஒநாய் மாதிரி ஊளையிடுவதில் என்ன பிரயோசனம். அன்றியும் அண்ணாத்துரையின் கருத்துக்களை எதிர்க்கப் போன காலம் சென்ற ரா. பி. சேதுப்பிள்ளையும் சோமசுந்தர பாரதியாரும் வாதிடவியலாது புறமுதுகிட்டோடியுள்ளார்கள் என்பது உனக்குத் தெரியாதா?

'இந்தியாவின் ஜனநாயகம் தழைக்க ஆரம்பித்த காலத்தில் அரசியல் அரங்கில் கால்வைக்காது இருந்த அண்ணாத்துரைக்கும்பலுக்கு 1957ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில்கூட ஜனநாயகத்தின் மகத்துவம் புரியாத அண்ணாத்துரைக்கு, அதன் பின் கூடிய திருச்சி மாநாட்டின் பின்னர்தான தெளிவு வந்தது என்கின்றாய். ஆனால் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் சுயமரியாதை இயக்கங்களாகத்தான் தோற்றுவிக்கப்பட்டன என்பதும், அவர்கள் சமுதாயச் சீர்திருத்தத்திலேயே அதிக அக்கறை காட்டி வந்தனர் என்பதும், பின்காலம் செல்ல அரசியல் அதிகாரம் பெறுவதன் மூலம் தமது இலட்சியங்களைச் சுலபமாக நிறைவேற்றலாம் எனக்கருதியே அரசியலில் குதித்தனர் என்பதும் உனக்குத் தெரியாததல்ல, எப்படியும் குறைகாண வேண்டுமென்ற நோக்கம்தான் உன்னிடம் காணப்படுகின்றது.

தேசியத் தலைவர்களும், தேசியப் பத்திரிகைகளும் இந்திய அரசும், இந்திய ராணுவமும் அண்ணாத்துரையின் மறைவு குறித்துக் காட்டிய மரியாதை அதிகப்பட்சமானது என்று வயிற்றெரிச்சல் படுகின்றாய். உன் போன்றவர்களுக்கு அது அதிகப்பட்சமானதாகத் தெரியலாம். ஆனால் அவர்கள் அண்ணாவின் திறமைக்கு மதிப்பளித்தார்கள்; சிறந்த பண்புக்கு அரசியல் பெருந்தன்மைக்கு மரியாதை செலுத்தினார்கள்.

தொடக்ககாலத்தில் அண்ணாவின் திறமையையும், பெருந்தன்மையையும் அறியாதிருந்த காரணத்தால் அண்ணாவையும், தி. மு. க.வையும் 'நான் சென்ஸ்' என்று திட்டிய நேருவே பின்புடெல்லி பாராளுமன்றத்தில் அண்ணா பேசுகின்ற போதெல்லாம் தனது வேலைகள் அத்தனையையும் ஒதுக்கி விட்டு அமர்ந்திருப்பார். அது மாத்திரமல்ல... குரிய நேரத்தையும் அண்ணாத்துரைக்குக்கொடுங்கள்' என்று ஒரு நாள் நேரு கூறியதாகப் பத்திரிகையில் படித்தோம்.

'நான்சென்ஸ்' எனக் கூறிய நேருவே பின்பு மனம் மாறி இப்படிக் கூறினரென்றால் அண்ணாவின் திறமைக்கு வேறு என்னதான் சான்று. நேருவின் மகளான இந்திராவும், இந்திய மத்திய அரசும் அண்ணாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையையே கொடுத்தார்கள் என்பது இப்போது புரிகிறதா? ஏன் நீ இப்போது புதிதாக வரித்துக் கொண்ட தலைவரும் அரசியலில் அண்ணாவின் பரம வைரியுமான காமராஜரே அண்ணா இறந்தபோது ஒரு மகத்தான தலைவர் எனப் பாராட்டினரே அதற்கு என்ன விளக்கம் கூறப்போகின்றாய்? அண்ணாவின் மரணத்துக்குக் கூடிய பலலட்சம் ஜனக்கும்பலைக் கண்டுதான் இவர்களெல்லாம் மனமயக்கம் அடைந்து விட்டார்கள் என்றும் அந்தக்கும்பல் வெறும் வேடிக்கைகாகக் கூடிய கும்பல் என்றும் உளறுகின்றாய். அந்தக் கும்பல் அண்ணாவின் மேலுள்ள பாசத்தால் கூடிய கும்பலா அல்லது வெறும் வேடிக்கைக்காகக் கூடிய கும்பலா என்பதை ... கின்றார்களோ அவர்கள் எல்லாம் அறிவார்கள். உண்மை என்றும் செத்து மடிவதில்லை.

நேருவின் மரணத்தின் போதும் காந்திஜியின் மரணத்தின் போதும் கூடிய கூட்டத்தைவிட இது பெரிய கும்பலென்று கேட்கின்றாய். உனது கேள்வியிலேயே நேருவுக்கும் காந்திக்கும் அடுத்ததாக மிகப் பெரியளவு சனக் கூட்டம் அண்ணாவுக்குத்தான் கூடியது என்பது பெறப்படுகின்றதல்லவா? அப்படியாயின் நேருவைப்போல, காந்தியைப் போல் அண்ணாவும் ஒரு மகத்தான மக்கள் தலைவர்கள் என்பதை இதிலிருந்தாவது ஒப்புக் கொள்கிறாயா?

'சட்டப்படி பார்த்தால் அண்ணாத்துரையைக் குறிப்பிடும்போது ஸ்ரீ அண்ணாத்துரையென்ருே திரு அண்ணாத்துரையென்ருே தானவானொலியில் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்றும், அண்ணா என்பது அதிகாரபூர்வமான பெயரல்லவென்றும் அகில இந்திய ரேடியோவின் மீது பாய்ந்திருக்கின்றாய். பண்டித ஜவகர்லால் நேருவை 'நேருஜி' என்று குறிப்பிடலாம் என்ருல் அண்ணாத்துரையை ஏன் அண்ணா என்று குறிப்பிடக் கூடாது. அண்ணாவின் மேல் பற்றும் பாசமும் கொண்டவர்கள் தமது பாசத்தையெல்லாம்வெளிப்படுத்தி 'அண்ணா' என்று அழைத்தால் அதில் கூட உனக்கு ஏன் காழ்ப்புணர்ச்சி ... 

எனவே இறுதியாகக் கூறுகின்றேன். தமிழ் கூறும் நல்லுலகம் நிலைத்திருக்கும் வரை, தமிழ் மொழி இத்தரணியில் வாழும் வரை தமிழ் மக்கள் இதயங்களிலெல்லாம் எங்கள் அண்ணா எமது இதய மன்னன் வாழ்ந்திருப்பான். உன்னைப்போல் ஆயிரமாயிரம் பேர் சேர்ந்து வந்து எதை எழுதினாலும் பேசினாலும் அவரின் புகழை அழித்துவிட முடியாது. எனினும் அண்ணாவின் மேலுள்ள பாசம் நீ கூறுவது போல் வெறும் அசட்டுத்தனமான பாசமல்ல; அது உண்மையான பாசம்! இதயத்தால் உணரப்பட்ட பாசம்.

உனக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கின்றேன். நேருவின் துணிவிருந்தால் இலங்கைக்கு வந்துபார்! அண்ணாவின் மீது பற்றும் பாசமும் வைத்திருக்கும் இலட்சம் கணக்கான எம் தமிழ் மக்கள் உனக்குப் பதிலடி தரக்காத்திருக்கின்றார்கள். அது மாத்திரமல்ல இப்படியான உனது அவட்டகள்' நிறுத்தப்படாவிட்டால் உனது திரைப்படங்களைப் பகிஷ்கரிக்கவும் பெரிய தொரு எதிர்ப்பியக்கம் நடத்த காத்திருக்கின்றோம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காட்சி தருகின்றன

கெயிட்டி (கொழும்பு) விலாசினி (தெகிவளை) நெல்சன் (திருமலை)



★

ரவிச்சந்திரன், விஜயகுமாரி, அசோகன், சந்திர காந்தா, —நடிக்கும்—

# செல்வியின் செல்வன்

செல்லமஹால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன், சரோஜாதேவி, நாகேஷ், வாணிஸ்ரீ நடிக்கும்



# தாமரை நெஞ்சம்

## இப்பொழுது காட்சிதருகிறாள்!

இங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
அயன் (மன்னார்) கிரைசெண்ட் (புத்தளம்) ஜுப்பிட்டர் (குருநாக்கல்)

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, நாகேஷ், ஆனந்தன், சோ, மனோரமா நடிக்கும்



# நினைவில் நின்றவள்

4வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) ராஜ் (ஸ்ரீகொழும்பு) மொடேண் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)

ஸ்ரீதரின் நெஞ்சிருக்கும்வரை

## இப்பொழுது காட்சியளித்துக் கொண்டிருக்கிறது



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருமலை)

ஜெய்சங்கர், விஜயலட்சுமி, நாகேஷ், மாதவி, ஓ. ஏ. கே. தேவர், பண்டரிபாய், டி. எஸ். முத்தையா, சுந்தரிபாய் நடித்த.

பவித்ரா பிக்சர்ஸ்

# அன்பு வழி

எமது அடுத்த வெளியீடு
சிவாஜிகணேசன் மூன்றுவேடங்களில் நடிக்கும்.
எங்க ஊர் ராஜா


இப்பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ... கொழும்பு ... நாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருடம் ஜூலை மாதம் 13-ந் திகதி ... பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org